## இயல் - 9

# கவிஞர் தே.ப. பெருமாளின் பிற இலக்கிய பணிகள்

*இயல் - 9*

# தே.ப. பெருமாளின் பிற இலக்கியப் பணிகள்

9. 1 முன்னுரை

9.2 தொகுப்பாசிரியர்

9.2.1 நோக்கம்

9.2.2 அமைப்பு

9.3 பதிப்பாசிரியர்

9.4 தொகுப்புரை

இயல் - 9

# தே. ப. பெருமாளின் பிற இலக்கியப் பணிகள்

## 9.1 முன்னுரை :-

கவிஞர். தே.ப. பெருமாள் கவிஞராக சிறுகதையாசிரியராக, நாவலாசிரியராக, நாடகஆசிரியராக, திறனாய்வாளராக, வாழ்க்கை வரலாற்றாசிரியராக இருந்ததோடு மட்டுமின்றித் தொகுப்பாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்திருக்கிறார். கவிஞரின் தொகுப்புப்பணியையும் பதிப்புப் பணியையும் இவ்வியல் ஆய்கிறது.

## 9.2 தொகுப்பாசிரியர் :-

'அறிஞர்களின் பொன்மொழிகள்', பெரியோர் சொல்லமுதம்', பிரபஞ்சமும் அறிவியலும்' என்னும் மூன்று நூல்கள் கவிஞரின் தொகுப்பு நூல்களாகக் காணப்படுகின்றன. இந்நூல்களில் மாணவர்களை நல்வழிப்படுத்தும் அறிவுரைகள் என்ற முறையில் பல்வேறு நாட்டின் அறிஞர்கள் கூறிய கருத்துக்கள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இத்தொகுப்புக்கள் சமுதாயத்தில் பொது அறிவை ஊட்டுவதற்குப் பயனுள்ளவையாக அமைகின்றன.

## 9.2.1 நோக்கம் :-

'அறிஞர்களின் பொன்மொழிகள்' நூல் முதல் பதிப்பாக 1963 - இல் வெளிவந்தது. ஆனால் ஆய்வாளருக்குக் கிடைத்தது, 1978 -ல் வெளிவந்த ஏழாவது பதிப்பு. 'பெரியோர் சொல்லமுதம்' முதற்பதிப்பாக 1968 - ல் வெளிவந்தது. "பெரியோர் சொல்லமுதம்' எனப்பெயரிய இந்நூற்களஞ்சியம் பெரியவர்களுக்கு மட்டுமல்லாமல் சிறப்பாக மாணவர்களுக்கு நல்லறிவையும் நல்லொழுக்கத்தையும் புகட்டும் முறையில் இலங்குகின்றது? "[1] என்ற பதிப்புரை வாக்கமே கவிஞரின் படைப்பு நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது.

மேலும் 'பிரபஞ்சமும் அறிவியலும்' நூலின் பதிப்புரையில் "உலகின் பல்வேறு பகுதிகளில் நடந்த அறிவியல் சம்பந்தமான நுட்பச் செய்திகளையும், வியப்பு நிகழ்ச்சிகளையும் மாணவர்கள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிமையான, இனிமையான தமிழ்நடையில் கவிஞர் தே த.ப. பெருமாள் அவர்கள் தொகுத்து எழுதியுள்ளார்கள். இச்செய்திகள் சிறுவர்கள் மட்டுமல்லாது அனைவரும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவையாகும் "[2], என அமைந்துள்ள வாக்கியங்கள் மாணவர் சமுதாயத்தின் நலனுக்காகவே கவிஞர் தே.ப. பெருமாள் இத்தகைய தொகுப்பு நூல்களைப் படைத்தளித்துள்ளார் என்பதை வெளிப்படுத்துகின்றன.

## 9.2.2. அமைப்பு :-

'அறிஞர்களின் பொன்மொழிகள் ' என்னும் நூல் 105 தலைப்புக்களில் அறிஞர்களின் பொன் மொழிகளைத் தொகுத்து வழங்குகின்றது. ' பெரியோர் சொல்லமுதம் ' இதைவிட சற்று விரிவாக அமைந்து 207 தலைப்புக்களைப் பெற்றுள்ளது. முதல் நூலில் வரும் தலைப்புக்கள் இரண்டாவது நூலில் இடம் பெறாமலும், முதல் நூல் தலைப்புக்களின் கீழ்வரும் பொன்மொழிகள் சில இரண்டாவது நூலில் விடப்பட்டும், சில தலைப்புக்களின் கீழ் அதிகமாக சேர்க்கப்பட்டும் உள்ளன. சான்றாக முதல்நூலில் 'அகிம்சை ' என்னும் தலைப்பில் ,

"'அகிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்தில் சிறந்த
வீரரின் தீரம் - சிங்சௌ.

அகிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது. -காந்திடிகள்

சத்தியம் என்னும் திருக்கோவிலை அடைய விரும்புவோன்
அகிம்சை என்னும் நெறியில் தான் இயங்க வேண்டும் - சிங்சௌ

விஞ்ஞானத்தை வளர்க்க வேண்டுமென்றால், அகிம்சாவழியில் தான் செல்ல வேண்டும். உன்னதமான, ஆனந்தமான வாழ்வுக்கு விஞ்ஞானத்தைச் சிறப்பாக நன்றாகக் கையாள வேண்டும்.

விஞ்ஞானத்தையும், அகிம்சையையும் இணைத்து இவ்வுலகில் சொர்க்கத்தைக் கொண்டு வரமுடியும் - வினோபாஜி "[3] என்று அறிஞர்கள் பலர் கூறிய நான்கு பொன்மொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளதையும், இரண்டாவது நூலில் இதே தலைப்பின் கீழ்

"சத்தியம் என்னும் திருக்கோயிலை அடைய விரும்புவோன் அகிம்சை என்னும் நெறியில் தான் இயங்க வேண்டும் - காந்தியடிகள்

அஹிம்சைக்கு ஆண்மை தேவை. அதுவே வீரத்தில் சிறந்த வீரரின் வீரம் - காந்தியடிகள்

அஹிம்சையிலும் சத்தியத்திலும் தோல்வி என்பதே கிடையாது - காந்தியடிகள்

ஹிம்சையை அஹிம்சையால் வெல்ல முடியாமற் போகுமாயின், அதற்குக் காரணம் உபயோகிப்பவனின் மனத்தின் பலவீனமே - காந்தியடிகள்

பலாத்காரங்களுக்கிடையே, அஹிம்சையைக் கண்டுபிடித்த துறவிகள், நியூட்டன் போன்ற விஞ்ஞானியினும் சிறந்த அறிவாளிகள் - காந்தியடிகள் '

உயிரை இழக்கத் துணியாத கோழையிடம் அஹிம்சையைப் பற்றிப் பேசுவதில் பயன் இல்லை. அஹிம்சை ஆண்மையின் அணிகலன் - காந்தியடிகள் "[4]

என ஒருவர் கூறிய ஆறு பொன்மொழிகளைத் தொகுத்து வழங்கியுள்ளதையும் காணலாம். முதல் நூலின் வளர்ச்சி நிலையே இரண்டாவது நூல் என்பதை முதல் நூல் தலைப்புக்களின் எண்ணிக்கையை விடவும் இரண்டாவது நூல் தலைப்புக்களின் எண்ணிக்கை மிகுந்து இருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது. இரு தொகுப்பு நூல்களிலுமே தலைப்புகள் அகர வரிசைப்படியே அமைந்துள்ளன.

' பிரபஞ்சமும் அறிவியலும் ' என்னும் இந்நூல் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. முதல் பாகத்தில் 63 தலைப்புக்களின் கீழ் உலகச் செய்திகளையும், இரண்டாம் பாகத்தில் 57 தலைப்புக்களின் கீழ் பல அரிய அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பற்றிய செய்திகளையும் தொகுத்து வழங்கியுள்ளார் கவிஞர் தே.ப. பெருமாள். மாணவர்களுக்குப் போது அறிவுத்திறனை வளர்த்தும் நோக்கத்துடனும் பல அறிவியல் கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்தும் நோக்கத்துடனும் இத்தகைய தொகுப்பு நூலைப் படைத்தளித்துள்ளார் எனலாம்.

" இப்பிரபஞ்சத்தின் பல்வேறு பகுதிகளில் நடந்துள்ள அறிவியல் பற்றிய நுட்பச் செய்திகளையும், வியப்புக்குரிய நிகழ்ச்சிகளையும் இந்நூல் அறிவிக்கிறது. இயற்கை விளைவிக்கும் அற்புதச் செயல்பாடுகளையும், அவ்வியற்கையில் தோன்றிய பற்பல பொருட்களின் அபூர்வத்தன்மைகளையும் இந்நூல் வழி தெரிந்து கொள்ளலாம்."[5] "இன்றைய அறிவியலின் உன்னத வளர்ச்சியில் மனிதன் ஆற்றியுள்ள அரும் பெரும் செயல்களையும் அவற்றால் ஏற்படும் பலாபலன்களையும் இந்நூல் வழி அறிந்து கொள்ள முடிகிறது. இன்னும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சுவையான பல செய்திகள் இந்நூலில் அடங்கியுள்ளன."[6] என நீலா நூலகத்தினர் ' இந்நூலைப்பற்றி .....' என்னும் தலைப்பில் கூறியுள்ள கருத்துக்களே நூலினால் விளையும் பயனைத் தெரிவிப்பனவாக உள்ளன.

இந்நூலில் தாவர ஆராய்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதும் உலகப் பெருந்தோட்டமாகக் கருதப்படுவதுமாகிய லண்டனில்

அமைந்துள்ள கியூ தோட்டத்தைப் பற்றிய செய்தியும், பாலைவனங்கள் எல்லாம் மண்மலைகள் அவை காற்றினால் இடம் பெயருபவை என்னும் செய்தியும் , நீரில்லாவிட்டால் நிலத்தில்தங்கி தன் உயிரைக் காத்துக் கொள்ளும் மீன்வகை, நீரில் நீந்திச் செல்கின்ற துருவக்கரடி, ஆர்டிக் சமுத்திரத்தில் உள்ள பஞ்சவர்ண ஏரி, இவை போன்று பல அதிசய கடல்வாழ் பிராணிகளைப் பற்றிய செய்தியும், மேலும் பல அற்புத நிகழ்ச்சிகளும் தொகுத்து வழங்கப் பட்டுள்ளன.

உலோகங்களை உருவாக்குவதற்காக எக்ஸ்-ரே என்ற கருவி கண்டுபிடிக்கப் பட்டுள்ளதையும், சோளம், நெல் போன்றவற்றை எளிதாகக் கதிரடிக்க இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதையும் அறிமுகப்படுத்துகிறார். சூரியசக்தியைக் கொண்டு மின்சாரம் தயாரிப்பு, செவ்வாயில் உயிரினங்கள் வாழலாம் என்ற அறிவியல் கண்டுபிடிப்பு , நதிகளைத் தாண்டுவதற்காகப் புதியடிராக்டர் கண்டுபிடிப்பு இன்னும் பல மருத்துவத்துறை கண்டுபிடிப்புகளை எடுத்துக் கூறுவதன் வாயிலாகப் பல துறைகளிலும் அறிவியல் எவ்வாறு வளர்ச்சி அடைந்து வந்துள்ளது என்பதை மாணவர்களுக்கு உணர்த்துவதற்காகவே பல நாட்டு அறிவியல் செய்திகளைத் தொகுத்து வழங்கியுள்ளார் கவிஞர் தே.ப. பெருமாள்.

கவிஞர். தே.ப. பெருமாளின் மூன்று தொகுப்பு நூல்களுமே மாணவர்களை நெறிப்படுத்தவும், அவர்களுக்குப் பொது அறிவை வளர்த்தவுமே முயன்றிருக்கின்றன எனலாம்.

## 9.3. பதிப்பாசிரியர் :-

கவிமணியின் நினைவாகக் 'கவிமணி தேவிமலர்' என்னும் நூலைக் கவிஞர் தே.ப. பெருமாள் பதிப்பித்திருக்கிறார். இந்நூலைப் பதிப்பிப்பதற்காகக் கவிஞர் எடுத்துக் கொண்ட முயற்சியும், ஈடுபாடும், எத்தகையது என்பதை, "கவிமணியின் நினைவில் இம்மலர் வெளிவருகிறது. இதை இன்னும் ஏற்றமான முறையில் கொணர முனைந்தோம். சில இடையூறுகளால் அது தடைபட்டதேனும், உருவான இது, தரத்திலும் தன்மையிலும், மேம்பட்டு மணம் கமழ்வதை அறிய முடியும். மலருக்குத் தம் அரிய இலக்கியச் செல்வங்களைத் தந்து உதவிய பெருமக்களுக்கும், விளம்பரங்கள் கொடுத்து ஆதரவு அளித்தவர்களுக்கும் இன்னும் பிற ஒத்துழைப்பு நல்கிய அன்பர்களுக்கும் எங்கள் இதயம் தோய்ந்த நன்றி "[7] என்ற நன்றியுரை வாயிலாக அறியலாம்.

கவிமணிக்குப் போதுமான அளவில் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தவில்லை என்று தமிழக அரசினையும், தமிழக மக்களையும் கண்டிக்கின்ற நிலையை, " இத்தகைய பெருமைக்குரிய பெருமகனாருக்குப் போதுமான அளவில் தக்க நினைவுச்சின்னங்கள் ஏற்படாதது வருந்துதற்குரியதே. இவர் பிறந்த இடத்தைச் சார்ந்த நாகர்கோவில் நகரில் இவர் நினைவால் எழுப்பப்பட்ட நிலையம் கூடச் சீராக இயங்கவில்லை எனத் தெரிகிறது. இவர் பெயரால் தக்க நினைவுச் சின்னங்கள் தோற்றுவித்தல் தமிழர் தம் தலையாய

கடனாகும். தமிழகத் தலைநகர் சென்னைக் கடற்கரையில் கூட இம்மேதைக்கு சிலை எழுப்ப வேண்டுதல் இன்றியமையாச் செயலாகும். இவை தமிழ் நலம் பேணும் அரசும், தமிழ் மக்களும் செய்ய வேண்டும் பணியேயாம்." [8] என்ற பகுதியின் வாயிலாக உணர்த்துவதோடு, தம் ஆதங்கத்தையும் இம்மலரின் வாயிலாக வெளிப்படுத்துகிறார்.

'கவிமணி தேவிமலரி' ல் கலைஞர் மு. கருணாநிதியின் வாழ்த்துரை அமைந்துள்ளது, மலருக்கு மேலும் மெருகூட்டுவதாகவே உள்ளது. மேலும் சில புகைப்படங்களைக் கொடுத்திருப்பதும் சிறப்புடையதாக இருக்கிறது. கவிஞர். தே.ப. பெருமாள் இம்மலரில் கவிமணியின் வாழ்க்கைக் குறிப்புக்களைக் கவிமணியின் பிறப்பு, திருமணம், ஆசிரியப்பணி , தமிழ்ப்பணி, பட்டமும் பாராட்டும், நூற்கள் , மறைவு என்னும் தலைப்புக்களின் கீழ் கூறிச் செல்கிறார். தொடர்ந்து தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், இலக்கியக்கர்த்தாக்கள் சூட்டிய புகழ்மாலைகள், வாழ்த்துப்பாடல்கள், கவிதைத் தொகுப்புகள், கவிமணியின் படைப்புக்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகள் முதலானவை வரிசையாக இம்மலரை அணி செய்கின்றன.

இம்மலரின் பிற்பகுதியில் சுமார் 45 பக்கங்களை விளம்பரத்திற்காக ஒதுக்கியிருப்பதிலிருந்து பலரின் ஆதரவோடுதான் இம்மலர்~~கள்~~ பதிப்பிக்கப்பட்டுள்ளது என்ற கருத்து உறுதியாகிறது.

## 9.4 தொகுப்புரை :-

கவிஞர் தே.ப. பெருமாள் தொகுப்பாசிரியராக இருந்து மாணவர்களுக்குப் பொது அறிவை வளர்த்தும் விதமாகவும் அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்துடனும் செயல்பட்டுள்ளார் என்பதும், பதிப்பாசிரியராக இருந்து கவிமணியின் பெருமையினைத் தமிழக மக்களுக்கும், மாணவச் சமுதாயத்திற்கும் நினைவுபடுத்தும் விதமாகவும் பணியாற்றியுள்ளார் என்பதும் புலப்படுகின்றன.

அடிக்குறிப்புக்கள் :-

1. தே. ப. பெருமாள் பெரியோர் சொல்லமுதம்' , பதிப்புரை, ப (iii)
2. தே.ப. பெருமாள், பிரபஞ்சமும் அறிவியலும்' , பதிப்புரை, ப. 4
3. தே.ப. பெருமாள், அறிஞர்களின் பொன்மொழிகள்', ப- 5
4. தே.ப. பெருமாள், ' (மு.கா.நூ)', ப-1
5. தே.ப. பெருமாள், ' பிரபஞ்சமும் அறிவியலும்
6. மேலது -
7. தே.ப. பெருமாள், ' கவிமணி தேவிமலர்' , ' நன்றி ' , ப.8
8. தே.ப. பெருமாள் , மேலது, ' நன்றி' , ப. 8